05 10 2023 **THURSDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு தேசிய கல்விக்கொள்கை ஊக்கம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இளையோரின் பங்களிப்புடன் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க முடியும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

3. டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

4. மத்திய அரசின் சாதனைகளை எடுத்துரைத்து மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள உள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப்போட்டியில இந்தியா இன்று 3 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

---- *இனி விரிவான செய்திகள்* ----

<<<<<<>>>>>

தேசிய கல்விக்கொள்கை ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் வள்ளலாரின் 200-வது பிறந்த தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், ஒளிபரப்பான காணொலி செய்தியில், பிரதமர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏராளமான பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அன்பு, இரக்கம், நீதி போன்ற வள்ளலாரின் போதனைகளை பரப்ப வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், நாடு முழுவதும் 80 கோடி ஏழை மக்களுக்கு மாதந்தோறும் ஐந்து கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இளையோரின் பங்களிப்புடன் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க முடியும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

இன்று ராய்பூரில் இளையோர் திருவிழாவை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்தியா பதக்கங்களை குவித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார். இதனை கண்டு நாடே பெருமிதம் கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய அரசு கடந்த ஒன்பது ஆண்டுகளில் நகர்ப்புற வளர்ச்சிக்காக 18 லட்சம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தூய்மை இந்தியா இயக்கம் துப்புரவுப்பணியில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவந்திருப்பதாக குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடி பாதிக்கப்பபட்டுள்ள விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

பயிர் பாதிப்பு விவரங்கள் முறையாக கணக்கிடப்பபட்டு இந்த தொகை வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கர்நாடகாவிலிருந்து காவிரியில் போதிய அளவு தண்ணீர் திறந்துவிடப்படாததன் காரணமாக டெல்டா மாவட்டங்களில் 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட பயிர்கள் வாடிய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் கட்டுக்குள் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஒன்றாம் தேதி 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் ஒரு லட்சத்து 33 ஆயிரம் பேர் பயனடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்படும் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதாகவும், இதன் காரணமாக அது கட்டுக்குள் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே ஜல்லிக்கட்டு மைதானம் அமைப்பதற்கான பணிகள் 75 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

இன்று இப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<<<>>>>>

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பகுதிநேர மற்றும் இடைநிலை ஆசிரியர்களை திமுக அரசு கைது செய்திருப்பது கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்ருத்தை பதிவு செய்துள்ள அவர், கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும், அவர்களது கோரிக்கைகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாசும் ஆசிரியர்கள் கைது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசு முன்வர வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பிஜேபியை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் சாதனைகளை எடுத்துரைத்து மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள உள்ளதாக கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் இடையே நல்லுறவு நீடிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் திரு அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

சட்ட விரோதமாக விளம்பரப் பலகைகள் வைப்பதை தடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த மாதம் 7-ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு கங்காபூர்வாலா, நீதிபதி திரு பரதசக்ரவர்த்தி அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

உள்ளாட்சி அமைப்புகளும் இதுதொடர்பான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளம்பரப்பலகைகள் வைக்க அனுமதி வழங்கும்போது உரிய சட்ட விதிகள் அமல்படுத்தப்படுவதை உள்ளாட்சி அமைப்புகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இலக்கியத்திற்கான நோபல் பரிசு நார்வேயை சேர்ந்த எழுத்தாளர் **Jon Fosse**-க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுமையான நாடகங்கள் மற்றும் உரைநடைகளுக்காக இந்த விருது அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**<<<<<<>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாதில் தனியார் மேல்நிலைப்பள்ளியில் நாளை மறுநாள் நடைபெறவிருந்த தனியார் வேலைவாய்ப்பு முகாம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், புதிய தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

-----------------

மதுரை பசுமலையில் உள்ள அரசு போக்குவரத்துக்கழக பயிற்சி மையத்தில் தகவல் உரிமைச்சட்டம் குறித்த விழிப்புணர்வு கலந்தாய்வுக்கூட்டம், மேலாண் இயக்குனர் திரு ஆறுமுகம் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------------

அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் மரக்கன்றுகள் மற்றும் பனை விதைகள் நடும் பணிகள் இன்று தொடங்கின.

---------------

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் வன உயிரின பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

------------------

விழுப்புரம் மாவட்டம் வள்ளலார் சன்மார்க்க சங்க மடத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-----------------

நாமக்கல்லில் சமையல் எரிவாயு கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

-------------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஒரு பெண் உட்பட 15 பேர் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப்போட்டியில், இந்தியா இன்று 3 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவின் **Hangzhou**–வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் வில்வித்தை ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஸ்குவாஷ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஸ்குவாஷ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சௌரவ் கோஷல் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மல்யுத்த போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் **Antim Panghal** வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 21 தங்கம், 32 வெள்ளி, 33 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் தொடர்ந்து நான்காவது இடத்தில் நீடிக்கிறது.

-------------------

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டி அகமதாபாதில் இன்று தொடங்கியது.

முதல் போட்டியில் இங்கிலாந்து – நியூசிலாந்தை எதிர்த்து ஆடிவருகிறது.

**<<<<<<END>>>>>**